சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 15

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 121

National Tamil Daily தேசிய தினசரி

(12-6-65)

விசுவாவசு வைகாசி 30 பைர் பிறை 11 சனிக்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத்தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

சட்டவிரோதக் குடியேற்றம்

# தீவிர தடுப்பு நடவடிக்கை

## ராணுவ அதிகாரிகள் மகாநாட்டில் கருத்து

யாழ்ப்பாணம், சனி

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியது அவசியமென்பதில் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற இராணுவ அதிகாரிகளினதும் வடபகுதி அரசாங்க அதிகாரிகளினதும் மகாநாட்டில் ஏகமனதான கருத்து நிலவியதாகத் தெரிகிறது. சட்டவிரோதமாகக் குடியேறியவர்களைச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைதுசெய்யும் போது அவர்களை இம்சைசெய்வது சரியல்லவென்றும் மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை பற்றி வடபகுதிக் கரையோரப்பகுதிகளைப் பார்வையிட்ட பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் இராணுவ கடற்படைத்தளபதிகளும் கொழும்பு திரும்பியுள்ளனர். சட்டவிரோதக்குடியேற்றத்தைத் தடுப்பதற்கு என்ன முறையில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பது பற்றி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்கா அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவாரென்றும் இதன்பின் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் தெரியவருகிறது.

---

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
04 M 0418 ரூபா 88,710

இரண்டாம் பரிசு
01 Z 0572 ரூபா 16,484

மூன்றாம் பரிசு
08 R 0696 ரூபா 8,871

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518 தந்தி: "யப்பான்"

# "ஊக்கமுடன் வாழ்ந்து ஆக்கம் பெறுவோம்"

## திருக்குறள் மகாநாட்டில பண்டிதர் இரத்தினம் தலைமையுரை

கிளிநொச்சி
(காவலர் அரங்கம்)

"ஊக்கமுள்ள உள்ளத்தவருக்கு எல்லாச் செல்வமும் உண்டாகும் என்று வள்ளுவர் கூறுகின்றார். ஊக்கமுடையவர்களாய் உயர்ந்த வற்றை எண்ணி ஆக்கம் பெற்று வாழ்வோம்" என்று கிளிநொச்சி எம். பி.யும் தமிழ் மன்றக்கழகத் தலைவருமான பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி ரொப்பிகோ பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள காவலர் அரங்கில் நேற்று மாலை ஆரம்பமான தமிழ்மன்றக் கழகத்தின் பதின்மூன்றாவது திருக்குறள் மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரைநிகழ்த்துகையில் கூறினார்.

கிளிநொச்சியிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் மகாநாட்டுக்கு மக்கள் வந்திருந்தனர். பண்டிதர் இரத்தினம் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

உலகில் வாழும் மக்கள் பல்வேறு திறமான வாழ்க்கையினை உடையவர்களாக இருக்கின்றனர். சிலருடைய வாழ்வு உயர்வதற்கும் பலருடைய வாழ்வு உயர்வடையாமைக்கும் காரணம் யாது? இதற்குப் பலர் பல காரணங்களைக் கூறலாம். என்றும் முதற் காரணத்தை வள்ளுவரைப் போல உள்ளங்கொள்ளக் கூறியவர்கள் எவருமில்லை.

"மனம்போல் வாழ்வு" எனும் முதுமொழியை யாவரும் அறிவர். இந்த முதுமொழி வள்ளுவர் கருத்தைத் தழுவியே தோன்றிற்று எனலாம். ஒருவனுடைய உயர்வுக்குந் தாழ்வுக்கும் உள்ளமே காரணம் என்கிறார் வள்ளுவர்.

உள்ளம் என்பதை மனம் என்றும் கூறலாம். வள்ளுவர் கூறும் உள்ளம் மக்களை பாவசிட்டத்தும் இயல்பாயுள்ள உளம் அன்று. ஊக்கம் நிறைந்த உளத்தையே வள்ளுவர் குறிப்பிடுகின்றார். உளத்தை ஊக்கமெனவும் ஊக்கத்தை உளமெனவும் அவர் இரண்டறக் கலந்து காட்டுகின்றார்.

உளத்து ஊக்கமே ஒருவனுடைய உயர்வின் காரணம் என்பதைத் தெளத் தெளிய ஓர் உதாரணம் காட்டி அவர் விளக்குகின்றார். குளங்களிலும் ஆறுகளிலும் நீர்ப்பூக்களைக் கொண்கின்றோக். இப்பூக்கள் நீருக்கேற்ற தாளை உடையனவாக இருக்கும். நீர் பெருகினால் இவற்றின் தாளும் நீளும். நீர் வற்றினால் இவற்றின் தாளும் குறுகும். இந்த இயற்கை நிகழ்வை வள்ளுவர் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

மனிதனே! நீர்ப்பூக்களைப் பார்! நீரின் அளவுக்கு அவை நீளுகின்றன. இதைப்போல உனது உளத்து ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப நீயும் உயர்வாய் என்று அறிவுறுத்துகின்றார்.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு" என்பது அவருடைய வாய்மொழி.

(8-ம் பக்கம் பார்க்க)

# 'ஒப்பந்தம் எதிர்காலத்தில் பலனளிக்கும்'

## தமிழரசு எம். பி. க்கள் கருத்து

பளை, வெள்ளி

"கடந்த ஒன்பது ஆண்டு காலப் போராட்டத்தின் பின்னர் தமிழ்மொழியின் உரிமை பெறுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பொருட்படுத்தி நாம் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளோம். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு. டட்லி சேனநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தான் எமது தமிழுரிமைகளைப் பெற்றுத்தரமுடியும். இவ் ஒப்பந்தம் சரித்திரப்பிரசித்தி பெற்றது பொன்எழுத்துக்களால் எழுதப்படப்போகும் ஒப்பந்தமாகும். இதை சிலர் எதிர்க்கின்றனர் என்று சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. ரத்தினத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். திரு. க. ப. தம்பு தலைமைதாங்கினார்.

திரு நவரத்தினம் தொடர்ந்த பேசுகையில் கூறியதாவது- கிளிநொச்சித்தொகுதியின் பிற்போக்கை நான் நன்குணர்வேன். இது பெரிய தொகுதியாகும்.- இதைச் சீர்ப்படுத்துவதில் பண்டிதர் இரத்தினத்திற்கு பெரிய பொறுப்பு உள்ளது. இவர் இப்பகுதிப் பிரதிநிதியாக வரமுன் எனது வீட்டிற்கு தினமும் இத்தொகுதியில் 8பேர் வரையில் குறைகூறிவந்தனர் தற்போது அது குறைந்துவிட்டது.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது-

நாம் அஹிம்சை வழியைக் கடைப்பிடித்துப்போராடுவோர்கள். நாம் கைக்கொள்ளும் அறப்போரினாலேயே உரிமைகளைப் பெறமுடியும். முதலில் தமிழ்வளரவேண்டின் தமிழினத்திற்கு குறிப்பிட்ட ஓர் இடம் வேண்டும். இரண்டாவதாக குடியேற்ற திட்டங்களில் தமிழ்மக்களுக்கு நிலம் வழங்கப்படவேண்டும். மூன்றாவதாக மலைநாட்டுத் தமிழருக்கும் பிரஜா உரிமை வழங்கப்படவேண்டும்.

மொழியுரிமை பெற்றுத் தருவதே எமது பிரதமலட்சியமாகும்.

தற்போதும் தனிச்சிங்களத்தினால் தமிழ்ப்பகுதிக்கந்தோர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதைப் பலர் என்னிடம் காண்பித்தனர். எமக்கும்கூட சிலசமயங்களில் தனிச்சிங்களக் கடிதங்கள், படிவங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன இன்றைய நாம் உடனுக்குடன் அரசாங்கத்தினர்க்கும் மந்திரிமார்களுக்கும் அறிவித்துத் திருத்தம் செய்துள்ளோம், இனிமேலும் முயற்சிப்போம்.

தனிமொழி, தனிநாடு, பிறக்கும் உட்பட அனைத்தையும் திருத்தியமைக்கவல்ல ஒரு சாதனமே மாவட்டசபையாகும், இது சிறப்பெறின் எமது கஷ்டங்கள் நீங்குவது எளிதாகிவிடும்.

---



யாழ்ப்பாணம் விநாயகர் ஆலயத்தில் நகைக மந்திரி சுகததாச திறந்துவைத்து உரை நிகழ்த்துகின்றார்.

---

## பாலம் திறக்கப்பட்டது

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சிக்கும் வட்டக்கச்சிக்கும் இடையில் போக்குவரத்தை இவ்வளவு காலமும் தடை செய்து வைத்திருந்த கனகராயன் ஆறு பாலத்தைக் கட்டி முடித்து போக்குவரத்தை ஆரம்பிக்கும் நோக்கமாக மேற்படி பாலத்தை நீர்ப்பாசன டைரக்டர் திரு. ஏ. டி. சி. கே. எஸ். குணசேகரா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்; இவ்விழாவில் கிளிநொச்சியில் உள்ள இதர இலாகா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்ருவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எமிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மல்லாகம், கோர்ட் றோட்டில், அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு முன்பாக நவீன வசதிகளுடன் கூடிய வீடும், 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: த. குமாரசுவாமி, கோர்ட் றோட், மல்லாகம். 400

சுன்னாகம் ஸ்டேசன் றோட்டில் 1 1/2 பரப்புக் காணி, கிணறு வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: இ. சபாபதி, ஸ்ரேசன் றோட், சுன்னாகம். 398

யாழ்ப்பாணத்தில், நிரந்தரமான ஆதாயம் கிடைக்கக்கூடிய ஏழுபரப்புக்காணி விற்பனைக்கு அல்லது ஈட்டுக்கு கிடைக்கும். பகிர்ந்து வாங்கலாம். சொந்தக்காரர்- செல்லத்துரை, 271, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 372

உடுப்பிட்டி - வல்வெட்டி றோட்டில் 7 1/2 பரப்பு பனங்காணி. விபரம்: க. தியாகராசா, காதன்ஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 393

மெமோறியல் பாடசாலைக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பெற்ற வீடு, 4 பரப்பு காணியுடன் உள்ளது. மெமோறியல் ஸ்கூல் லேன், மானிப்பாய். விபரம்: E கனகரெத்தினம், 8-ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 394

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பழைய தேர் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு K. V. கனகரத்தினம், ரத்தின ஆபரணமாளிகை, சுன்னாகம் திட்டி, யாழ்ப்பாணம் 505

### குடியிருப்புக்கு

யாழ்ப்பாணம்—மருதடி வீதியில் வாடகை இல்லாமல் குடியிருக்க வளவு கிடைக்கும் சொந்தக்காரர் விலாசம்: நடராஜா, ஒன்று, அம்மன் வீதி, கந்தர்மடம் 502

### தேவை

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தடியில் இருக்கும் கிறீஸ்டார்ப்பப்படக் கம்பெனியில் வேலை செய்ய பெண்பிள்ளைகளும், ஆண்பிள்ளைகளும் தேவை. அநுபவமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம். இவர்களைமேற்பார்வையிட ஒருவயதுமுதிர்ந்த அம்மாளும் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை நேரில் வந்து விண்ணப்பிக்கவும். காலம் 14-6-65 வரை. A. S சபாரத்தினம், 138 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 397

படித்த, விவேகமுள்ள குமாஸ்தாக்கள் (Clerks) தேவை. சம்பளத்துடன் லாபத்தில் பங்கும் கொடுக்கப்படும். பிணைப்பணம் கட்டத் தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கவும். இல. 504, மே/பா. ஈழநாடு, த. பெ. இல 49, யாழ்ப்பாணம். 504

அனலைதீவு ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு உதவி மனேஜர் தேவை கல்வித்தரம்: ஜே. எஸ். சி, அல்லது எஸ். எஸ். சி கூட்டுறவுப் பயிற்சி விரும்பத்தக்கது. வயது 20 - 45. பொறுப்பு: ரொக்கப்பிணை 1000 ரூபா, காணிப்பிணை 2000 ரூபா சம்பளம்: மாதம் 115 ரூபா. 28-6-65 க்கு முன் காரியதரிசிக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பிக்கவும். 503

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பலகொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மாதிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்


# 'தொழிலாளியின் மகன் தொழிலாளியாகவே வளரக்கூடாது'

கொல்லாந்தை, வெள்ளி

"இன்று மலையகம் முழுதும் 80க்குமேற்பட்ட தனியார் பாடசாலைகள் கல்விப்பணி புரிந்து வருகின்றன. இவைகளைத் தும் மலையகக் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது முதியோருக்கும் கல்விவசதி அளிக்க முன்வரவேண்டும். இதற்காகக் காலை மாலை இரவுநேரப் பாடசாலைகள் நடாத்தப்படவேண்டும். புத்தகப் படிப்பை மட்டும் முக்கியமானதாகக் கொள்ளாமல் கைத்தொழிற் பயிற்சியிலும் முன்னேற இப் பாடசாலைகள் மாணவருக்கு உதவவேண்டும். இதன்மூலம் மலையகத்தில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும். தொழிலாளியின் மகன் தொழிலாளியாகவே இராமல் கல்விமானாக வளரவேண்டும். இந்த நோக்கம் மலையக முதியோரிடம் பரவச் செய்யவேண்டும்." இவ்வாறு வட்டவளை அமலன் பாடசாலைப் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்த ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபர் திரு. இரா. சிவலிங்கம் பேசுகையில் கூறினர். கூட்டத்திற்குக் கண்டி அசோகா மாணவர் விடுதி அதிபர் திரு. பி. டி. ராஜன் தலைமைதாங்கினார். விழாவில் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

# 3 வருடத்துக்குமுன் சேதமடைந்த பாலம் இன்னும் திருத்தப்படவில்லை

கொல்லாந்தை, வெள்ளி

கொல்லாந்தைக்கும், பெரகலைக்குமிடையில் ஒரு பாலம் கடும் மழையினால் மூன்று வருடங்களுக்கு முன்னர் சேதமடைந்தது. அப்பாலம் இன்றுவரை சரிவரத் திருத்தியமைக்காமல் இருப்பதால் இப்பகுதியில் போக்குவரத்து அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக பாலத்தினால் தற்போது போக்குவரத்து நடைபெறுகிறது. இப்பாலத்தைக் கடக்க அதிக நேரமெடுப்பதாகவும், வாகன விபத்துக்களும் அதிகமாக ஏற்படுகிறதென்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனிதத்தலமான கதிர்காமத்திற்குச் செல்லும் பிரதான பாதையாக விளங்கும் இப் பாலத்தின் அவலநிலையால் கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

---

## இன்று

கொக்குவில் ... முருகமூர்த்தி கோவில் சம்பூர்ண ராமாயண விரிவுரையில் மாலை 7 மணி முதல் மணிபாகவதர் "கண்டேன் சீதையை" என்னும் சரிதை பற்றிக் கதாகாலக்ஷேபம் செய்வார்.

## 'சைவத்தை வளர்த்தவர் சேக்கிழார்'

யாழ்ப்பாணம், சனி

"சைவசமய போதனை மாத்திரமல்ல சாதனையையும் வளர்க்கக் கல்லூரிகள் முன்வரவேண்டும். சேக்கிழார் விழாவில் பங்குபற்றி, அவர் புகழை அறிவதும் அவர் சைவத்திற்குச் செய்த தொண்டை நினைவு கூருவதும் போற்றத்தக்க முயற்சி" என திரு. த. இரத்தினதுரை சண்டிருப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சேக்கிழார் விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விசேட பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை கூறியதாவது:

"சேக்கிழார் விழா வைக் கொண்டாடுவதால் எல்லா நாயன்மாரையும் கொண்டாடும் பேறு கிடைக்கின்றது. சிந்தாமணி என்னும் அவ கதையால் மக்கள் மயங்கி இருந்தவேளையில் சிவகதை பாடி சைவத்தை வளர்த்த பெருமை சேக்கிழாருக்குண்டு. சைவத்தை வளர்க்கக் கல்லூரிகள் இத்தகைய விழாக்களை நடத்துவது பெருமளவில் உதவிபுரியும்."

ஆசிரியர் திரு. மு. சிவானந்தம் நன்றியுரை கூறினர்.

---

## வள்ளுவர் விழா

சுழிபுரம், வெள்ளி

சங்கானை இந்து இளைஞர் வருகிற வெள்ளிக்கிழமை வள்ளுவர் விழாவை மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. அமிர்தலிங்கம் விழாவை ஆரம்பித்துவைப்பார். பட்டிமன்றம், நாடகம் ஆகியனவும் நடைபெறும். திருக்குறள் சம்பந்தமான போட்டியொன்றைச் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடாத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசு வழங்குவார். சங்கானை நிகரை வைரவர்கோவில் முன்றலில் விழா நடைபெறும்.


# விளம்பரம்

## அறிவித்தல்

மாதகலில் இருக்கும் சுப்பிரமணியர் மாணிக்கவாசகராகிய எனக்கு மலேயாவில் இருக்கும் எனது சகோதரராகிய சுப்பிரமணியர் சதாசிவமும் அவர் மனைவி கதிராசிப்பிள்ளையும் தங்கள் காணி, பூமி வளவுகளை பராமரித்து கொடுக்கல்வாங்கல் செய்யுமாறு 8-7-59-ல் அவர்களால் கைச்சாத்திடப்பட்ட அற்றோனி தத்துவம் வழங்கப்பட்டது என்பதை அறியத்தருகின்றேன். இந்தத் தத்துவ இலக்கம் 11508 பிரசித்த நொத்தாரிஸ் A. சித்தியானந்தனால் தயாரிக்கப்பட்டது.

ச. மாணிக்கவாசகர்,
மாதகல் கிழக்கு,
415 மாதகல் போஸ்ட்.


## மேலும் அவகாசம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

மொழிச்சட்டம் காரணமாக உத்தியோக உயர்வு பெறாதவர்களுக்கும், மொழிச்சட்டம் காரணமாக சேவையிலிருந்து வெளியேற்றப்பட்ட பழைய அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்காக மேலும் அவகாசம் கொடுக்கப்படுமெனத் தெரிய வருகிறது. இவ்வித முடிவு நேற்றைய கூட்டத்தில் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது

## 24மணி நேரத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்


பம்பலப்பிட்டி வெள்ளி

குருநாகலையிலுள்ள மாவட்ட ரிஜிஸ்தர் காரியாலயம், ஒருவர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கான விண்ணப்பம் செய்த 24 மணி நேரத்தில் அதைக் கொடுக்கத் திட்டம் வரைந்துள்ளது.


தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான

# சவரின் வளையல்கள்

ஐந்துவருடம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்க நகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை. தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41, M 36, M 3, M 35
M 37, M 36, M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட
ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ. 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ. 8-50. M 27 ஜோடி ரூ. 12-50, M 32 ஜோடி ரூ. 12-50, M 49 ஜோடி ரூ 15-00, M 29 ஜோடி ரூ. 15-00
M 47 ஜோடி ரூ. 18-50.

# ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.



கோவில் கும்பாபிஷேகங்களுக்கு
தேவையான

# அஷ்டபந்தன மருந்து

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனுதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப் பவுடர்
★ பச்சைச் சந்தனம்
(உடன் யந்திரத்தினல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541, 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# வியட்காங் வசமான நகர் மீட்கப்பட்டது

## நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்ற கடும்தாக்குதல்

### அமெரிக்க நடவடிக்கைக்கு பிரஞ்சு அதிபர் டிகோல் கண்டனம்

சைகோன், ஜூன் 11

சென்ற புதன்கிழமை இரவு தென் வியட்நாம் தலைநகர் சைகோனுக்கு வடக்கே 60 மைல் தூரத்தில் உள்ள போங்சுவாங் என்ற நகரை வியட்காங் கம்யூனிஸ்டுகள் தம்வசமாக்கினர். நேற்று தென் வியட்நாம் அரசாங்கப் படைகள் ஒருநாள் முழுவதும் நடத்திய கடும் தாக்குதலின் பின் அந்த நகரைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். நேற்றைய சண்டையில் வியட்காங் தரப்பினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாம். தென்வியட்நாம் தரப்பில் 80 துருப்புக்களும் 12 அமெரிக்கரும் மாண்டனர். நாள் முழுவதும் அந்த நகரில் விடாமல் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேசமயம் தென்வியட்நாம் அரசாங்கம் உதவிக்கு அழைத்தால் உடனடியாக உதவிக்குச் செல்வதற்கு அமெரிக்கத் துருப்புக்கள் தயாராக இருக்கின்றன.

**ஜோன்ஸன் ஆலோசனை**

நேற்று அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் வியட்நாம் நிலைமை பற்றி தமது உயர்தர ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தினர். வியட்நாமிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஜெனரல் மாக்ஸ்வல் டெய்லரும் இதில் கலந்து கொண்டார்.

**தொண்டர்களை சீனு அனுப்பும்**

வியட்நாமில் வியட்நாம் மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நடத்தும் போராட்டத்தில் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளிப்பது சீன மக்களின் கடமையென்றும் வியட்நாம் மக்களுக்கு உதவியாக சீனாவிலிருந்து தொண்டர்கள் அனுப்பப்படுவார்களென்றும் சீன அரசாங்கப் பத்திரிகையான 'பீபிள்ஸ் டெய்லி' தெரிவித்துள்ளது.

**ஆஸி துருப்புக்கள் உதவி**

தென்வியட்நாம் அரசாங்கம் உதவி கோரினால் அமெரிக்கத் துருப்புக்களுடன் ஆஸ்திரேலியத் துருப்புக்களும் சேர்ந்து உதவியளிக்க உத்தரவிட்டிருப்பதாக ஆஸ்திரேலிய அதிகாரியொருவர் சொன்னார்.

**சோவியத், பிரான்ஸ் கண்டனம்**

வியட்நாமில் தென்வியட்நாம் அரசாங்கத்துக்கு உதவியாக சிறுசிலிருந்து தனது துருப்புக்களை அனுப்பி வைத்திருப்பதற்கு சோவியத்யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.

வியட்நாமில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் கண்டித்தார். உலகில் அமெரிக்கரும் ரஷ்யரும் மட்டுமல்ல மற்றவர்களும் வாழ்கிறார்களென்பதை அமெரிக்கா உணர்ந்து கொள்ள வேண்டுமென ஜெனரல் டிகோல் கூறினார்.

## சந்திரனுக்கு சென்ற ரஷ்ய ராக்கெட் பாதைவிலகியது

லண்டன், ஜூன் 11

சந்திரமண்டலத்துக்கு சோவியத் யூனியன் சென்ற செவ்வாய்க்கிழமை அனுப்பிய 'லூனா-6' என்ற ராக்கெட் அதன் திசையிலிருந்து விலகிவிட்டது. இப்பொழுது சந்திரமண்டலப் பாதையை விட்டு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சென்றுகொண்டிருக்கிறது. அதன் வேகமும் குறைந்துள்ளதாம். சிலமாதங்களுக்கு முன் சோவியத் யூனியன் அனுப்பிய ராக்கெட் திட்டமிட்டபடி சந்திரமண்டலத்தைப் போய் அடைந்தபோதிலும் எதிர்பார்த்தபடி அமைதியாகப் போய் இறங்காமல் சந்திர மண்டலத்தில் மோதி விழுந்தது.

## ஆபிரிக்க மந்திரிகள் அவசர மகாநாடு

லேகாஸ், ஜூன் 11

ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்துக்குள் பிளவு ஏற்பட்டு அந்த ஸ்தாபனம் குலைந்துவிடாமல் தடுக்கும்பொருட்டு அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த 30 நாடுகளின் மந்திரிகளைக்கொண்ட அவசர மகாநாடொன்று நைஜீரியாவின் தலைநகரான லேகாஸில் நேற்று ஆரம்பமானது. இந்த மகாநாட்டை நைஜீரிய பிரதமர் சேர் அபூபக்கர் தபாவா பலேவா அழைத்திருந்தார். மகாநாடு அந்தரங்கமாக நடைபெறுகிறது: ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரஞ்சு பேசும் ஒன்பது நாடுகள் தங்களுக்கெதிரான நாசவேலைகளில் கானா ஈடுபடுவதாக குற்றம்சாட்டியதைத் தொடர்ந்தே ஆபிரிக்க ஐக்கியம் குலைந்துவிடும் ஆபத்து ஏற்பட்டது.

## 3 வருடங்களில் டெலிவிஷன்

சென்னை ஜூன் 11

இன்னும் மூன்று வருடங்களுக்குள் கல்கத்தா, பம்பாய் சென்னை ராஜ்யங்களில் ஒரே சமயத்தில் டெலிவிஷன் சேவை வந்துவிடுமென உதவித் தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு வி ஆர். பட்டாபிராமன் கூறினார். பஞ்சாயத்துக்களுக்கும் பாடசாலைகளுக்கும் முதலில் டெலிவிஷன் அமைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

## பாம்பு கடித்து நடிகர் மரணம்

கராச்சி, ஜூன் 11

பாகிஸ்தான் சினிமா நடிகர் ஷேக் முகம்மது சென்ற ஞாயிற்றுக்கிழமை பாம்பு கடித்து மரணமானார். லாகூர் ஸ்டுடியோ ஒன்றில் பாம்புடன் அவர் தோன்றும் காட்சியை படம் பிடிக்கும்போதே இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாம்பாட்டியாக அவர் நடித்தார்.

## கனடாவில் பிரதமர் சாஸ்திரிக்கு வரவேற்பு

ஒட்டாவா, ஜூன் 11

கனடாவில் ஐந்து தினங்கள் உத்தியோகபூர்வமாகவிஜயம் செய்யும் பொருட்டு இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி இன்று ஒட்டாவா வந்து சேர்ந்தார். கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன், கனடா வெளிவிவகாரமந்திரி ஆகியோரும் மற்றும் அதிகாரிகளும் பொது மக்களும் இந்தியப் பிரதமரை விமானநிலையத்தில் உற்சாகத்துடன் வரவேற்றனர். 21 குண்டுகள் தீர்த்து திரு. சாஸ்திரிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் இந்தியப் பிரதமரை வரவேற்று கனடாப் பிரதமர் நிகழ்த்திய சுருக்கமான உரையில் இந்தியாவுக்கும் கனடாவுக்குமிடையிலுள்ள உறவையும் தொடர்பையும் குறிப்பிட்டார். கொழும்புத் திட்டத்தின்கீழ் இந்தியாவுக்கு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு கனடா பெரும் மகிழ்ச்சி கொண்டிருப்பதாக திரு. பியர்ஸன் கூறினார்.

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுதந்திரம், ஜனநாயகம், உலகசமாதானத்தைப் பேணுதல் ஆகியவை இந்தியாவுக்கும் கனடாவுக்கும் உள்ள பொதுவான முக்கிய கொள்கைகளென்றார்.

## சாஸ்திரி - அயூப் - நாஸர்

## அல்ஜியர்ஸில் சந்திப்பு

### சமரசப் பேச்சுக்கு நாஸர் முயற்சி

கெய்ரோ, ஜூன் 11

அல்ஜியர்ஸில் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஆசிய — ஆபிரிக்க மகாநாட்டில் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியையும் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயையும் சந்தித்துப் பேசச்செய்ய ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் திட்டமிட்டுக்கொண்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது.

திரு. சாஸ்திரியுடன் திரு. நாஸர் கெய்ரோவில் சந்தித்துப்பேசியபொழுது இதுபற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

பாகிஸ்தான், சீன ஆகிய நாடுகளுடன் இந்தியாவுக்குள்ள தகராறுகளுக்குத் தீர்வு காண இந்தியப்பிரதமர், சீனப் பிரதமர், பாகிஸ்தான் அதிபர் ஆகியோர்களைச் சந்திக்கச்செய்வதுபற்றி நாஸர் இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரியுடன் ஆலோசனை நடத்தியதாகவும் அறியப்படுகிறது.

கட்ச்தகராறு

## மத்தியஸ்த தீர்ப்புக்குவிட பாகிஸ்தான் தயார்

### பாதுகாப்பு சபைக்குக்கடிதம்

நியூயோர்க், ஜூன் 11

இந்திய பாகிஸ்தான் எல்லையில் தோன்றியுள்ள ரான்-கட்ச் தகராற்றை பாரபட்சமற்ற மத்தியஸ்தத்துக்கு அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்கு விடுவதற்கு பாகிஸ்தான் தயாராக இருப்பதாக ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஐ. நா விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ரான்—கட்ச பிரதேசம் பாகிஸ்தானுக்குரியதென்றும் அதற்கு ஆதாரமுள்ளதென்றும் விளக்கிகூறும் அந்தக்கடிதம் இந்தியஎல்லையில் படைகளைக்குவித்து பலாத்காரமிரட்டலில் இந்தியா ஈடுபட்டுள்ளதென்றும் கூறுகிறது. ஐ நா. பாதுகாப்புச்சபைதீர்மானத்தையும் விதிகளையும் இந்தியாதான் மீறி நடந்துவருவதாகவும் பாகிஸ்தான் பிரதிநிதி அக்கடிதத்தில் குற்றம்சாட்டியுள்ளார்.

ரான்-கட்ச் தகராறு மட்டுமல்ல காஷ்மீர் பிரச்னை உட்பட இந்தியாவுக்கும்பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள சகல பிரச்னைகளுக்கும் நிரந்தரமான நியாயமான தீர்வுகாண பாகிஸ்தானைப்போல் இந்தியாவும் முன் வரவேண்டுமென தாங்கள் எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் பிரதிநிதி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு

பம்பலப்பிட்டி, வியாழன்

ஆயிரம் லைத்தறி நெசவு நிலையங்களை நாட்டின் பல பகுதிகளிலும் நிறுவி சுமார் 25,000 இளைஞருக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொடுக்க வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை சம்பந்தமாக ஆராய்ந்த மந்திரிசபை உபகமிட்டி ஆலோசனை செய்தது.

## சாஸ்திரியுடன்தொடர்பு

புதுடில்லி, ஜூன் 11

வெளிநாடு சென்றுள்ள இந்தியப் பிரதமருடன் எப்போதும் தொடர்புகொள்ளக்கூடிய முறையில் புதுடில்லிக்கும் கெய்ரோ, ஒட்டாவா, லண்டன் ஆகிய நகரங்களுக்குமிடையே 24 மணி நேர டெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஷோம்பேயைக் கொல்ல முயற்சி

லியப்போல்ட்வில்லி, ஜூன் 11

காங்கோ பிரதமர் திரு. ஷோம்பேயைக் கொலைசெய்ய முயன்ற ஒருவர் கூட்டத்தினரால் கையப்புடைக்கப்பட்டார்.

## தமிழ்ப் பாடசாலை கலைவிழா

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டி வட்டார தமிழ்ப் பாடசாலைகளின் வருடாந்த கலைவிழா இம்மாதம் 18-ம்19-ம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக அறியப்பட்டுள்ளது.

தலைமைஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படும் இவ்விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அரங்கிலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி அரங்கிலும் நடைபெறுமாம் எனவும் தெரியவருகிறது.

மத்தியவிழாவை நடத்தாது இருவிழாக்களிலும் தெரிவுகள் செய்து பரிசளிக்கச் சங்கம் முடிவு செய்திருப்பதாயும் கூறப்படுகிறது.

## நேரடி பஸ்சேவை

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை இ போ. ச. டிப்போவில் இருந்து முல்லைத்தீவு, திருக்கோணமலை அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கு நேரடிப் பஸ்சேவை பெரும்பாலும் ஜூலைமாதமுதல் நடைபெறலாம் எனத் தெரியவருகிறது.

இச்சேவைகளின் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும் வாக்குறுதி அளிக்கப்பட்டபடி மேலதிக புதிய பஸ் வண்டிகள் வருவதிலுள்ள சுணக்கமே இச்சேவைகளின் ஆரம்பம் பின்போடப்பட்டு வருவதற்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

## தபால்பெட்டி இல்லை

கோண்டாவில், வியா

கோண்டாவில் மேற்கு வாசிகள் வெளியிடங்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கு, சமீபத்தில் தபால் பெட்டிகளெதுவும் இல்லாததால் பெரும் கஷ்டப்படவேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக கோண்டாவில் கிராமசபையின் 13-ம் வட்டார அங்கத்தவர் திரு சே பத்மநாதன் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கும் தெரிவித்துமக்களின் கஷ்டங்களைப் போக்கு முகமாக ஒரு தபால் பெட்டியை விரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்குமாறுகேட்டுள்ளார்.

## யா. மறுமலர்ச்சி மன்ற நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

யாழ். மறுமலர்ச்சி மன்ற வருடாந்தப் பொதுக்கூட்டம் மாவிட்டபுரத்திலுள்ள மன்ற அலுவலகத்தில் மன்றத் தலைவர் திரு பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மன்ற அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின்னர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. பொ. செல்வரத்தினம், அக்கிராசனர்- திரு. ஏ. சி. பொன்னுத்துரை, உப அக்கிராசனர்- திரு. டபிள்யு. சி. அன்னப்பா, காரியதரிசி- எஸ். ஜே யோசேப்பு, உப காரியதரிசி- கே ஞானபண்டிதன், தனாதிகாரி- சி. கந்தசாமி. ஒன்பது பேர்கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## மானிப்பாய் கி. ச. இடைத் தேர்தலில்

சுழிபுரம், வெள்ளி

மானிப்பாய் கிராமசபையின் 4-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கடந்த சனிக்கிழமை தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கந்தையா நாகலிங்கம், வேலுப்பிள்ளை குமாரசாமி ஆகிய இருவருமே போட்டியிடுவாராவர்.

## தேர்த் திருவிழா

பனாய், சனி

சுழிபுரம் பனாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை திருவடிநிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

மனைவாக்கு

தனக்குவமை இல்லா தான்தாள் சேர்ந்தார்க் கல்லால் -மனக்கவலை மாற் றலரிது.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 3893

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 30 உ (12-6-65)


## கிளிநொச்சியில் திருவள்ளுவர்

கிளிநொச்சிக்குத் திருவள்ளுவர் விஜயம்செய்துள்ளார். நேற்று முதல் அங்கு சிறப்புடன் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டினைத்தான் குறிப்பிடுகிறேன், தெய்வப்புலமை திருவள்ளுவரின் தூய உள்ளம் தானே திருக்குறள், இத்திருக்குறள் மகாநாடு அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு நல்லவழி காட்டி அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவவேண்டும்.

வட்டமாகாணத்தின் நெற்களஞ்சியமாகிய கிளிநொச்சியின் மலைகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கு குடியேறி, பொய்யாமொழியர் போற்றும் உழவைச் செய்பவர் தொழுதுண்டு வாழ்பவரல்லர் காடாகக் கிடந்த அந்த இடத்தில் துணிச்சலுடன் குடியேற்வயலாக்கி, உணவை உற்பத்தி செய்துதரும் நல்ல பணியைச் செய்பவர்கள். அவர்கள் ஆற்றும் இக்கற்பணி திருவள்ளுவர் உள்ளத்தைக் குளிர்விக்கும்.

ஆனால் அங்கு மரவரி முறையினால் கள் அரக்கன் பிடியிலே மனிதம் சிக்கி அவதிப்படுவதைப்பார்ப்பின் அவரே கண்ணீர் விடுவார். கள்ளினால் மக்களுக்கு என்னென்ன கேடுகள் ஏற்படுமென்பதை அவர் ஒரு தனி அதிகாரத்தில் விளக்கியிருக்கின்றார். தென்னிலங்கையிலே மரவரி முறையை எதிர்த்து ஒழித்துக்கட்டிவிட்டனர். ஆனால் வடமாகாணத்தில் பல்லாண்டுகளாக மதுபானத்தை மாணவர்கள், பெண்கள் இவர் களிடையிலும் பரப்பி பெருங்கேடு செய்யும் இத்தீமையை எதிர்த்துப்பேச எந்தத் தலைவரோ, சமயஸ்தாபனங்களோ முன்வரவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்க நாதிருந்தமாகும்; காரணம் எதுவாயினும் சரி, கிளிநொச்சியிலே இந்தத் திருக்குறள் மகாநாடு நடப்பதன் பயனாக, மரவரி முறை மட்டுமன்றி, மதுபானப் பழக்கமே இனி ஒழிந்து மக்கள் நல்வாழ்வு வாழ திருவள்ளுவர் அருள்பாலிக்கவேண்டும். இன்றேல் இம்மகாநாடு நடந்தும் பயன் எதுவுமில்லாமற்போகும்.

வாழ்க்கையை நாம் எவ்விதம் நடத்தவேண்டுமென்பதற்கு ஓர் மேலான இலக்கணமே திருக்குறள். இந்த இலக்கணப்படி வாழ்க்கையை நாம் நடத்துவதாயின் வாழ்க்கையில் மேலான இன்பமும் புகழும் பூரண வெற்றியும்பெற முடியும். ஆனால் திருக்குறளை முற்றிலும் மனப்பாடம் செய்தாலும், அதிலுள்ள நெறிப்படி நடப்பதென்பது கடினமானவுள்ளது. அதற்கான மனத்திண்ணம் நம்முயற்சியாலன்றி இறை அருளால்தான் ஏற்படமுடியுமென்பதை உணர்ந்து கடவுள் வாழ்த்தை முதல் அதிகாரமாக வைத்து, வாழ்க்கையின் இலக்கணத்தை வகுத்துத் தந்துள்ளார் பொய்யாமொழியர். அவர் வகுத்துள்ள இந்த இலக்கணத்துக்கு இக்காலத்தில் ஓர் இலக்கியமாக அமைந்தது மகாத்மாகாந்தி அடிகளின் வாழ்க்கைதான். தெய்வபக்தரான காந்தி அடிகளாரின் வாழ்க்கையையும் அவரது உபதேசங்களையும் உண்மையில் பின்பற்றுபவர்கள், திருவள்ளுவர் வகுத்த திருக்குறள் இலக்கணப்படி வாழ்க்கையில் பூரண வெற்றி பெற்றவர்களாவர். இந்நேரத்தில் ஓரளவாவது கிளிநொச்சி மகாநாட்டின் பயனுக்கு கைகூடுமாயின், அது அங்குள்ள மக்களுக்குப் பெரிய நன்மையை அளிப்பதாக இருக்கும்.

### இன்று திருவள்ளுவர் ஜயந்தி



# ஆன்மீக ஞானி

வெண்பா

ஆதிபக வானளித்த ஆன்மீக ஞானி; உயர்
நீதிநூல் தானளித்த நீள்புகழோன்-கோதில்திரு
வள்ளுவரு டன்குறளை வாழவனி மக்கள்யாம்
உள்ளுவமே யுள்ளத் துவந்து.

ஆசிரிய விருத்தம்

துறவறமொ டில்லறமென் செவ்வறமிரண்டையுந்
 தூயதொல் புவியில் வாழும்
துன்னுபல சாதியர் சூழ்சகல சமயிகள்
 துகளறக் கற்று உய்ய,
மறங்கடி மணக்குடவர் மாசில்பரி மேலழகர்
 மாண்பொடுய ருரைகள் செய்த
மாஞால வினமக்கள் தத்தம்மொழி யிற்பயிலும்
 மா'திருக் குறள்'நன் னூலை,
அறமோடு பொருளின்ப மென்னுமுப் பொருள்களை
 அரியவி ரடிகள் கொண்ட
ஆயிரத் தொருமூன்று நூற்றுமுப் பதுகுறள்
 அறிவுசெறி பாக்க ளாலே
நறவொழுக நன்கீந்த நல்லதெய் வப்புலவன்;
 நவிலுமான் மீக ஞானி;
நல்லவர சியல்ஞானி நாடுபுகழ் வள்ளுவரை
 நாமுவந் துன்னல் நலமே!

-கவிஞர் மு. க. சூரியன்

## உணவளிக்கும் உழவர் பெருமக்கள் எடுக்கும் விழா
## 13-வது திருக்குறள் மகாநாடு

— அ. க. இராஜேந்திரம் —

(இணைச்செயலாளர், திருக்குறள் மகாநாடு செயற்குழு)

செந்தமிழ் செழிக்க திருக்குறள் செய்தவர் திருவள்ளுவர். வள்ளுவர் உள்ள நாளெல்லாம் தமிழ்வாழும், தமிழ்வாழும் இடமெல்லாம் வள்ளுவர் வாழ்வார். திருக்குறள் பொது நூல். எந்தச்சமயத்தாருக்கும் சொந்தமானது, எந்நாட்டவர்க்கும் ஏற்றது. எந்தக்காலத்திற்கும் இயைந்தது. பள்ளிப் பிள்ளைகள் அள்ளிப் பருகும் அமுதஊற்று. பற்றுத்துறந்த ஞானிகளுக்கு பழுத்தவேதம். பருவக் காளையர்க்கும், கன்னியர்க்கும் 'காதல் ஓவியம்'. வாழவழியற்றோருக்கு வழிகாட்டி. கிலை தவறியோருக்கு நெறிவிளக்கு. ஆராய்ச்சியாளர்க்கு அறிவுச்சுரங்கம்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்குறளின் பெருமையை தமிழ்பேசும்மக்கள் அறிந்து அனுபவிக்க வழிசெய்வது தமிழ்மறைக்கழகம். கடந்த பன்னிரண்டு திருக்குறள் மாநாடுகள் ஈழத்தின் பல பாகங்களிலும் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுள்ளன. இம்முறை பதின்மூன்றாவது மாநாடு கிளிநொச்சித்தொகுதி மக்களின் ஆதரவில் கிளிநொச்சி ஜெட்டிக்கோமை நானத்தில் அமைக்கப்பட்ட நாவலர் அரங்கில் நடைபெறுகிறது. கிளிநொச்சி விவசாய நாடு. கால்சட்டை போட்டு கைகட்டி வேலைபார்த்தும், கூட்டப்பட்ட சீவியத்தான் மிச்சமென கைவிட்ட நிலையில் வந்த 'கொழும்பாரை' கைதூக்கிவிட்ட கமநாடு. பிறந்தவூரில் வாழ வசதியற்ற ஏழைகள் பலர் குடியேறி, காடுதிருத்தி, கழனியாக்கிப் புதுப்பணக்காரர் ஆகிய புதூர், வள்ளுவர் போற்றிய 'வான்சிறப்பை' நம்பி வாழும் மக்களின் வசிப்பிடம் ஆகவே ஊருக்கு உணவு அளிக்கும் உழவர்பெருமக்களே உலகத்துக்கு அருள்ஒளி அளித்த வள்ளுவரை போற்றுதல் சாலச்சிறந்தது.

தமிழ்மறைக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்களை கிளிநொச்சித்தொகுதி மக்கள் தங்கள் பாராளுமன்ற உறுப்பினராகத்தெரிந்தெடுத்துள்ளனர். தமிழ் மறையை தமிழரது வீடெல்லாம் முழங்க வைத்த திரு. இரத்தினம் அவர்களுக்கு கிடைத்த பெருமை இது.

தமிழகத்திலிருந்தும், நமது தாயகமாம் ஈழத்திலிருக்கும் தலைசிறந்த தமிழறிஞர்களும், கலைஞர்களும், கவிஞர்களும் வந்து கலந்து இம்மகாநாட்டைச் சிறப்பிக்கிறார்கள், மதுரை ஔவை துரை நடராசன், அவர் துப்பாசிரியர் மருத்துவகலாநிதி தாரா நடராசன் போன்றோர் தமிழகத்திலிருந்து வந்துள்ளார்கள். உரையரங்கு, கருத்தரங்கு, கவியரங்கு, கலையரங்கு என பரந்த அடிப்படையில் வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்களும் மாநாடு நடைபெறுகிறது.

திருவள்ளுவரைப் போற்ற திருக்குறள் மாநாடு நடத்துவதோடு நமது கடமை முடிந்துவிட்டதா? சினிமாப் பாடல்களைப் பாடமாக்கும் நமது சிறுவர்களைத் தினந்தோறும் ஒரு குறள் படிக்கவைப்போம். வீட்டில் மலிவு நாவல்களைப் படித்து மகிழ்ச்சியடையும் மாணவர்களை கையடக்கமான திருக்குறளை வாங்கிப் படிக்க சிந்திக்க வைப்போம். மதத்தால், குலத்தால், இடத்தால் அரசியல் மாறுபட்ட நாம் திருக்குறளால் ஒன்றுசேர்வோம். நமக்குள் உள்ளபேதங்களை மறப்போம், வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்வோம்.

வாழ்க திருவள்ளுவர்!
வாழ்க திருக்குறள்!!

### நம் கடமை

வள்ளுவர் வழி அறவழி அன்புவழி, அருளவழி. புத்தர் கண்ட பொன்னெறி-வள்ளுவர் குறளிலே இயங்குகின்றது. சோக்ரதர் காட்டிய அன்னொளி - வள்ளுவத்திலே வீசுகின்றது. நபிகள்நாயகம் கண்ட சமத்துவ ஒளி-தமிழ் அறத்திலே தலைமைவகிக்கின்றது. வள்ளுவர் வழி மனிதனை அவர் யாரென்று உணரச்செய்து கடமைகளை நினைவூட்டி உலகத்தோடு ஒத்து வாழச்செய்கிறது. எளிமையைப்பாதுகாக்கின்றது; நாடு, மொழி கலை, நாகரிகம் அனைத்தையும் வளப்படுத்துகின்றது.

அவ்வுரிமையைப் பலகாலமாகப் பெற்றிருந்தும், இழந்துள்ள தமிழரும், அறியாமலே உள்ள திராவிடரும், மற்றவரும் உலகின் பல்வேறு பகுதியில் வாழும் மக்களும் உணரும்படி செய்யவேண்டியதே இன்றைய நம் கடமையாகும்.

—பேராசிரியர் க. அன்பழகன்

## திருவள்ளுவன் பிறப்பால்...

திருவள்ளுவனது பிறப்பைப்போல் பெருமை மிக்க பிறிதொரு நிகழ்ச்சி தமிழகத்தின் வானாற்றில் இல்லை. திருவள்ளுவனது வருகையால் தமிழகம் வானளாவிய பெருமைபெற்றுவிட்டது. தமிழர்களாகிய நாம் ஒரு புகழ்பெற்ற இனத்தின் வழிவந்தவர்கள் என்று மற்ற நாட்டவர்கள் கருதுவதற்குக் காரணமே திருவள்ளுவன் தான், தனது பேரறிவுப் பெருவெள்ளத்தால் தமிழினத்தின் பெருமையை உலகறியச் செய்தவன். தமிழன் மீதும் தமிழ் நாட்டவர் மீதும் அழுக்காறு கொள்ளுமளவுக்குப் பெருமை தேடித் தந்தவன். அறிவுலகத்திசமும் இவனது பெருமையை யாரோ அறியவல்லார்!

— கோவை சதாசிவம்

### ஐயாறன் எழுதுவது

இயற்கை அழகு கொஞ்சம் மட்டக்களப்பிலே நுளம்பு உபத்திரவம் தாங்கவில்லை. என்னுடன் வந்திருந்த இரு நண்பர்கள், இரவெல்லாம் தூக்கமில்லாமல் மிகவும் சங்கடப்பட்டுப்போயினர். நாங்கள் தங்கியிருந்த வீடு, கடலேரிக்குப் பக்கத்திலிருந்தது. கரையிலெல்லாம் ஓரே அசுத்தம். மீன்கள் ஏதும் பண்பாடுகின்றனவா என்று இரவிலே ஏரிப்பக்கம் போய்ப் பார்த்தேன். அப்படி இல்லை, "ஙொய்" என்ற கோஷத்துடன் நுளம்புகள் தான் மனிதர்களைத் தாக்குவதற்காகப் படைபடையாக எழுந்து, வந்துகொண்டிருந்தன.

மறுநாள் அந்த இரு நண்பர்களும் கடைத்தெருவிலே ஒரு வீட்டு மச்சில் போய்ப் படுத்திருந்தனர். அங்கு ஒரு நுளம்புகூட வரவில்லையென்றும் நிம்மதியாகத் தூங்கியதாகவும் தெரிவித்தனர்.

• • •

நகர மண்டபம் நல்ல சூழ்நிலையிலிருந்தும் அதைச் சுற்றியும் அசுத்தங்கள், குப்பைகள். இலங்கையிலேயே ஒரு "பியூட்டி ஸ்பாட்"டாக இருக்கக்கூடிய அந்த இடம், யாத்திரிகர்களை அதிகமாக வசீகரிக்கக்கூடிய அப்பகுதி நாற்றமெடுக்கின்றது.

இதைப் பற்றி விசாரித்ததில் அங்குள்ள நகரசபையினருக்குப் பணவசதி இருப்பதாயும் ஆனாலும் அவர்களது கவனக்குறைவே, ஊர் சுகாதாரக் குறைவாகவும் நுளம்புத் தொல்லை அதிகமாகவும் இருப்பதற்குக் காரணமென்று அங்குள்ள ஒருவர் கூறினார்.

பசும்பாலும் அங்கு கிடைக்காதாம். உண்மைதானா? எல்லாம் பரதேசிப் புட்டிப்பால் தான் என்றார் நண்பர். மக்களின் சுகாதாரத்தைக் கவனிப்பதே நகரசபையின் முக்கிய கடமை. சுகாதாரத்துக்குப் பசும்பால் மிக முக்கியமாகும். சுத்தமான பசும்பால் மலிவாக மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுடன் நகரைச் சுத்தமாக வைத்திருக்க எல்லா முயற்சியும் எடுக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி கொழும்பு மாநகர சபை வரவேற்பு அளித்த போது அறிவுறுத்தினர். இனி மேலாவது அப்படிச்செய்தால் மட்டக்களப்பை முதல்நம்பர் "ரீஸ்ட் சென்டர்" ஆக்கிவிடலாம்.

• • •

அங்கு மைதானத்திலே கடும் வெயிலிலே நாள்முழுதும் பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. ஏராளமான கூட்டம். பாவம், அந்த இளம் மாணவ மாணவிகள் வெயிலில் எவ்வளவு சங்கடப்பட்டார்களோ!

* * *

கரவினா மனத்தராகிக் கைதொழுவார் கட்கென்றும் இரவினின்றெரிய தாடி இன்னருள் செய்யும் எந்தை மருவலார் புரங்கள் மூன்று மாட்டிய வகையராகிப் பரவுவார்க்கருள்கள் செய்து பருப்பத நோக்கினரே.

— அப்பர் சுவாமிகள்.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

# "வள்ளுவனையும் குறளையும் போற்றி புகழ்வது எமது பிறப்புரிமை"

## திருக்குறள் மகாநாட்டில் வரவேற்புரை

கிளிநொச்சி
(நாவலர் அரங்கு)

'வள்ளுவனையும் குறளையும் போற்றிப் புகழ்ந்து மகிழ்வது எங்கள் அனைவரதும் பிறப்புரிமை' என்று கிளிநொச்சி றொபேர்க்கோ மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நாவலர் அரங்கில் தமிழ்மறைக் கழகத்தின் பதின்மூன்றாவது திருக்குறள் மகாநாடு நேற்றுப் பிற்பகல் ஆரம்பமானபோது வரவேற்புரை நிகழ்த்திய திருக்குறள்மகாநாட்டுச் செயற்குழுவின் துணைத்தலைவர் மருத்துவ கலாநிதி ஜாக் ஆசைப்பிள்ளை குறிப்பிட்டார்.

பேச்சாளர்களையும் கவிஞர்களையும் மற்றையோரையும் வரவேற்று அவர் மேலும் கூறியதாவது:-

1996 ஆண்டுகளுக்கு முன் தமிழனாய்ப் பிறந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அத்தகைய வாழ்வை நமக்கும் காட்டி, வான்உறை தெய்வத்துள் வைக்கப்படும் வள்ளுவனுக்கு இன்று விழா எடுக்கிறோம்.

திருக்குறள் இன்று உலகத்தின் பொதுச்செல்வமாகிவிட்டது. அதை அருளிய வள்ளுவனும் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்; எனினும் வள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் தமிழர்களாகிய நாம் விழா எடுக்கும்போது எமக்கு ஒரு தனிப்பட்ட உரிமையும் பெருமையும் உண்டு.

இன்றைய மகாநாடு தமிழ் மறைக் கழகத்தின் 13-வது விழா. இவ்விழாவிற்குப் பல சிறப்புகள் உண்டு. உழுதுண்டு வாழும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தப் பகுதியில் வன்னி இராச்சியத்திலே இத்தன்மை நடைபெறுகின்றது. கிளிநொச்சி பலவிதங்களில் மிக வேகமாக முன்னேறி வருகிறது. அந்த மறுமலர்ச்சியில் இலக்கிய விழிப்பும் ஒன்று என்று காட்டும் ... தனது பாராளுமன்ற ... பினரை ஒரு தமிழ் அறிஞராக, தமிழ் மறையை உலகெங்கெல்லாம் எடுத்துச்செல்லும் தமிழ்த்தொண்டராக புகழொடு தோன்றிய பொதுநல ஊழியராக அது பெற்றுள்ளது. அன்னாரது நேரடியான தலைமையின் கீழ் இம்மகாநாடு ஆரம்பமாவது நமது பாக்கியமும் விழாவின் சிறப்புமாகும்.

எமது நாட்டில் மூன்று தினங்களிலும் பங்குபற்றும் பிரதம விருந்தினர் திரு. ஒளவை துரை நடராசன் தம்பதிகள் ஆவார்கள், சிறிய குறள்களின் பெரிய கருத்துக்களை நன்கு அறிந்து சுவைத்தவர்கள் அவர்கள். தமிழ்நாட்டில தமது நாவன்மையால் குறளின் பெருமையைக் கற்றோருக்கும் கல்லாதவர்களுக்கும் எடுத்து உரைத்து வருபவர்கள், தமது சிந்தனையின் செழுமையை எமக்கு விருந்தாக்கி எம்மைக் குறள்காட்டும் தெய்வநெறியின் அடிப்படையில் வாழ வழிகாட்டுவார்கள்.

'நானிலம் என்னும் நல்லுடமை பெற்ற' திரு. ஒளவை துரை நடராசன் அவர்களே, அவர்தம் வாழ்க்கைத் துணைவியாகிய வைத்திய கலாநிதி தாரா நடராசன் அவர்களே உங்கள் வருகையால் நாம் பெருமையடைகிறோம்.

நாளைக்கும் அதற்கு அடுத்த நாளும் தலைமை வகிக்க இருப்பவர்கள் முறையே சர்வகலாசாலையிலும் இலங்கைக் கல்விப் பகுதியிலும் தமிழ்மொழியின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பெருமக்கள். அவர்கள் தலைமையிலும் இன்று தமிழ்மறைத் தலைவர் தலைமையிலும் விரிவுரையாற்றுபவர்களபலர். அவர்கள் அனைவரும் திருக்குறள் காட்டும் வாழ்வையும் பொருளையும், அருளையும், பண்பையும், அறத்தையும் பலவிதமாகப் பலகாலமாகப் பார்த்தவர்கள். விரிவுரைகளிலும் கருத்தரங்குகளிலும், பங்குபற்றும் அவர்களது விழுமிய கருத்துக்களை அவர்களை இன்னும் தெரியாதவர்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தும்.

கவிஅரங்கத்தில் இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியின் தலைமையில்பங்குபற்றும் கவிஞர்கள் தமிழ் மறையை பலவிதமாகக் கண்டு பாட இருக்கிறார்கள், அவர்கள் நோக்கு எமக்குப் பெரும் விருந்தாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கலையரங்கில் இரு பெரியார்களின் தலைமையில் பங்குபற்றுபவர்கள் எமது அழைப்பை ஏற்று பலநாளபழகி விருந்தளிக்க வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் தலைமை தாங்குபவர்கள், விரிவுரையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவரையுமே மகாநாட்டுச் செயற்குழுவின் சார்பில் வருக! உங்கள் வரவு நல்வரவாகுக! என்று மனம் மகிழ்ந்து வரவழைக்கின்றோம்.

திருக்குறள் பேச்சுப்போட்டியில் பங்குபற்றிய இளைஞர்கள் அனைவரையும் அத்துடன் மாணவர்கள் இ, ன்டும் இல்லாதுபோதும் திருக்குறளைக் கற்று மனனஞ்செய்து கண்ணுடையராகிவிட்ட செல்வகுமாரர்களையும் இளைஞர்களை வருக என்று அழைக்கின்றோம்.

வள்ளுவனையும் குறளையும் போற்றிப் புகழ்ந்து மகிழ்வது எங்கள் அனைவரதும் பிறப்புரிமை.

—

## வள்ளுவனின் உருவம்

நீங்கள் உண்மையான திருவள்ளுவனைக் காணவேண்டுமா? அப்படியானால் அவனது குறட்பாக்களைப் படியுங்கள்; ஆழ்ந்து படியுங்கள். வள்ளுவன் தன்னையே தனது நூலில் அமைத்துக்கொண்டுவிட்டான். அவனது தூய பண்பெல்லாம் அவனது நூலில் பொதிந்துகிடக்கின்றன, நூலில கூறுகின்ற வாழ்க்கை நெறியை திருவள்ளுவன் தானே வாழ்கின்றான். அதுமட்டுமல்ல, குறட்பாக்களிலே திருவள்ளுவனது பேரறிவுத் திருமுகம் ஒளிருகின்றது. அவனது பரந்த நெற்றி அவனது எல்லையற்ற அறிவுச் சான்று கூறுகின்றது. அவனது அடர்ந்த வளைந்த புருவங்கள் அவன் ஒரு மேதை என்பதை உலகுக்கு உணர்த்துகின்றன. அவனது ஒளி வீசும் கண்களிலே புலமை வழிந்தோடுகின்றது. அவனது எடுப்பான மூக்கு அவனது பேராற்றலின் பெருமையை முரசறைகின்றது. அவனது அகன்ற மார்பும் திண்தோள்களும் அவனது ஆண்மைக்கு இலக்கணம் கூறுகின்றன. அவனது பொன்மேனி முழுவதும் அறிவொளி மின்னுகின்றது. அவன் வானகத்துத் தாரகை, வையத்து முழுநிலவு. ஆகவே அத்தகைய மாண்பு மிக்க மனிதனைத் தீட்டிக்காட்டுவோம். அதுதானே அந்த அறிவின் திருவுருவைப் பெருமைப்படுத்தும் முறை.

— கோவை சதாசிவம்

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

காலும் அவரும் அந்நோக்குடையவராகக் காட்சியளிக்கின்றார், சைவசமயத்தவர்களுக்கு சைவசமயத்தவராகவும், சமண சமயத்தவர்க்கு சமணராகவும், கிறிஸ்த சமயத்தவர்க்கு கிறிஸ்தவராகவும் தோன்றும் வள்ளுவர் எம்மதத்தினர்க்கும் ஏற்ற கருத்துடையவராகக் காணப்படுகிறார். துறவியலைப் படிக்கும் போது அவர் ஒரு துறவியாகத் தென்படுகிறார், இல்லறவியலை நோக்கும்போது இல்வாழ்வோராகக் காட்சி அளிக்கிறார். அரிய நுண்கருத்துக்களை அழகாகத் தரும் அவரது அரசியல் கருத்துக்கள் அவர் ஓர் அரசியல் மேதையாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கச் செய்கிறது.

இன்று வள்ளுவருக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழ்மக்கள் தங்களை வளமாக்க வழி செய்கின்றனர். அகிலமெல்லாம் குறளின் அருங்கருத்துக்கள் அவ்வம்மொழிகளில் பரவுவதால் அம்மொழிகள் அழகுபடுகின்றன.

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ
வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை"

## தமிழணங்கை அலங்கரிக்கும் மாலை

வள்ளுவனார் வையத்தார்க்கு வைத்துச்சென்ற
சொத்து - இந்த
வையம் போற்றிக் காத்து வரும் விலையிலாத முத்து
கள்ளமிலாத் தமிழர் செய்த தவத்தாலுற்ற
பேறு - இன்று
குவலயத்தில் இதற்குநிகர் நூலிருக்கோ வேறு!
அன்ன அன்ன வந்திடாத தென்னறிவின் ஆறு - நீ
ஆனுதினமும் அதற்புரண்டு அருவதாலே தேறு
உளஞ்சோர்ந்து வாடும்போது உற்ற நண்பன்
போலே - வந்து
உட்கிருந்து ஊக்கந்தர வல்லதிந்த நூலே

அன்புமணம் கமழுகின்ற அருமையான
சோலை - எங்கள்
அன்னையான தமிழணங்கை அலங்கரிக்கும் மாலை
உண்மையான பணிதனுக்கு வழி வகுக்கும்
பாதை - உலக
அறிஞருக்கும் அறிவையூட்டும் புதுமையான மேதை
சொல்நயமும் பொருள்நயமும் செறிந்திலங்கும்
ஏடு - இதன்
சிறப்பதனை உரைதியச் செம்மொழியொன்று கூடு
துன்பமென்னும் கடலைத்தாண்டத் துணைபுரியும்
தோணி - இன்று
தொட்டுஇதைத் தெய்வமாகப் போற்றுவோமே பேணி

— அரியாலையூர் மோசேஸ் —

# தரணியெங்கும் தமிழுக்கு புகழ்தந்த திருக்குறள்

— செல்வி. கு. பூரணம் —

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே-தந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு"

ஐம்பதிற்கும் மேற்பட்ட மொழிகள் தங்கள் தங்கள் மொழியில் மொழிபெயர்த்த வான்புகழ் திருக்குறளைத் தந்த வள்ளுவரை வாயாரப் போற்றுகின்றான் புதுமைக்கவிஞன் பாரதி.

"மகன் தந்தைக்கு ஆற்றும்
உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ்
சொல்"

என்ற குறளிற்கு இலக்கியமாக வள்ளுவர் வாழ்கின்றார் தமிழ் அன்னையின் தவப்புதல்வனாகத் திகழும் வள்ளுவனைப் பெற்ற தமிழன்னை என்ன தவம் செய்தாளோ என்று எல்லா மொழியினரும் வியந்து பாராட்டுகின்றனர். உலகம் போற்றும் உயர்ந்த கொள்கையுடைய திருக்குறளால் தரணியெங்கும் தமிழ் தனிப்புகழ் பெற்றுவிளங்குகின்றது.

குறுகிய அடிகளில் நிறைந்த சிறந்த பரந்த கருத்துக்களை இனிய சொற்களில் எடுத்து வினவும் திருக்குறளில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லையாகும், என்றல் பெரு மரபினரான வள்ளுவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'எவ்வுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற கொள்கைகளுடன் வாழ்ந்தமையைத் திருக்குறளில் பார்க்கக்காண்கின்றோம்.

பொய்யாமொழிப்புலவர் யாத்த இக்குறள் என்றும் நின்று நிலவுவதற்குக் காரணம் அவரது விரிந்த பரந்த மனப்பான்மையே யாகும். ஒரு மொழி பேசும் மக்களுக்குரிய நூலாகவோ, ஒரு சமயச் சார்புடைய நூலாகவோ அமையாது எல்லோரும் படித்துச் சுவைத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக ஆக்கியுள்ளார். அந்நூல் காலம் கடந்த நூலாக என்றும் நின்று நிலவுகிறது.

காமத்துப்பாலைக் கற்போர் வள்ளுவரைக் கவிஞராகக் கருதுகிறார். பொருட்பாலைப் படிப்போர் அவரைச் சான்றோராகப் போற்றுகின்றனர், அறத்துப்பாலைக் கற்போர் அவரை அறவோராகவே காண்கின்றனர். திருவள்ளுவரை எந்நோக்குக் கொண்டு பார்த்

(8-ம் கலம் பார்க்க)

சின்னச் சின்ன நடை நடந்து சிங்கார மொழி பேசும் சிறார்களின் பிறந்த நாள் பரிசுகளுக்கும் பண்டிகை நாட்களில் விசேஷ அலங்கரிப்புக்கும் உகந்தவை.

"பால்கோ" ஜீன்ஸ், சூட் ஆடைகளே
உயர்ரக துணிகளில் நவீன வேலைப்பாடுகளுடன் நாகரீகமாக அமைக்கப் பெற்றவை
"பால்கோ" ஜீன்ஸ், சூட் ஆடைகளே
எல்லா அளவுகளிலும் பல்வேறு நிறங்களிலும் கிடைக்கக் கூடியன "பால்கோ" ஜீன்ஸ், சூட் ஆடைகள் இன்றே வாங்கி உபயோகியுங்கள்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

M. சந்துரு
55, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

கோழிப் பண்ணை கூட்டு ஸ்தாபனம்
இல. 3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்,
இலங்கை
மிகச் சிறந்த இனப் பெருக்கிற்கும்
உணவுத் தேவைகளுக்கும்
7170 இலக்கத்திற்கு போன் செய்யுங்கள்
மாட்டுத்தீன், கோழித்தீன் விற்பனையாளர்கள்
இலங்கை எண்ணெய் கொழுப்பு
கூட்டுஸ்தாபன பொருட்களை
கையிருப்பில் கொண்டுள்ளவர்கள்

இன்னும் சில நாட்களில் தொடங்கவிருக்கும்
இரும்புப் பொருள் விற்பனவுப்
பகுதியுடன்
யாழ்ப்பாண மக்களின் சகல தேவைகளையும்
பூர்த்திசெய்யும் ஒரேயொரு ஸ்தாபனம்
யாழ். /ப. நோ. கூ. ச. சமாச
பிரதான சில்லறைக் கடை
15/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய ஆஸ்பத்திரிக்குப் பின்புறத்தில்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"

# திருக்குறட் கடவுள் வாழ்த்து

— வை. அ. கைலாசநாதன் —

எந்த ஒரு நூலையும் புலவன் யாக்க முனையும்பொழுது அவன் நெஞ்சில் தெய்வபக்தி எழுதல் இயல்பு. அந்த இயல்பு முற்காலங்களில் மரபாகவே கொள்ளப்பட்டு வந்துள்ளது.

சங்க காலத்திலே யாக்கப்பெற்ற செய்யுட்கள் அனைத்துமே தனியனவாக விருப்பதனால் அவற்றுக்குக் கடவுட் பாடன் மரபு செய்யுளின் முன் அமைந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் வந்த பெருமக்கள் சங்ககாலப் பாடல்களைப் பொருண்மரபுக்கு இயையப் பாகுபடுத்தித் தொகுத்து வைத்தனர். இத்தொகுப்புக்களுக்கு ஒவ்வொரு சிறப்புக் கடவுளரைப்பற்றிய கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

தொல்காப்பியர்,

'கொடிநிலை கந்தழி வள்ளி
யென்ற வடுநீங்கு சிறப்பின்
முதலன மூன்றுங் கடவுள்
வாழ்த்தொடு கண்ணிய
வருமே'

என்று புறத்திணையிற் கூறியுள்ளார். அதற்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர் 'கந்தழி'யை விளக்கிய போது. கந்தழியாவது ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள் என்று கூறினர். திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் வகுத்த உரையிலும் இதனையே வலியுறுத்தினர். பாடாண்டிணையில், 'செத்துப் பிறக்கும் மக்களேயன்றிப் பிறப்பில்லா முழுமுதற் கடவுளரும் வாழ்த்திற்குரியர்' என்பதே அச்சூத்திரத்தின் பகுப்பொருள்.

தொல்காப்பியர்,

'ஏனை யொன்றே தேவர்ப்
பராய முன்னிலைக்
கண்ணே'

என்னுர் பேராசிரியர் இச்சூத்திரத்துக்கு உரை வகுக்கும் பொழுது. 'ஒழிந்த ஒத்தாழிசை முன்னிலையிடமாகத் தேவரைப் பராசவும் பொருண்மைத்து' என்று உரைத்தார்.

இலக்கணவிதிகளும் அவற்றின் உரைகளும் சங்ககாலக் கடவுட் பாடன மரபு அமைந்தவற்றை மேற்கண்டவாறு விளக்குகின்றன. பழந்தமிழ் மக்கள் கடவுளுக்குக் கோயில் கட்டி வழிபட்டனர் என்பது,

பத்தினிக் கோட்டம் படிப்
புறம் வகுத்த பத்தினி விழா
வணி நிகழ்கென் றேவி வல

முறைமுறை வந்தனன்

என்னும் அடிகளாற் பெறப்படுகின்றது. 'முக்கட் பகவன் அடி தொழா தார்க்கின்று, என்றும், எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.' என்றும், 'தனக்குவமை யில்லாதான் தாள்' என்றும் வருதல் கடவுள் உருவவழிபாடு இருந்ததென்பதற்கு உரியதாகின்றது.

இம்மரபுப்படி சங்க மருவிய காலத்தில் எழுந்ததும், பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாய் தலையாயதுமான திருக்குறள், நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களுள் முதன்மையாகவும், பெருமையாகவும் கடவுள் வாழ்த்தைக் கொண்டிலங்குகின்றது, ஈறன் வெண்பாக்களினுலான திருக்குறளில் முதற்பத்து வெண்பாக்கள் கடவுளின் நிலையைக் காட்டிச் செல்கின்றன.

திருக்குறட்கடவுள் வாழ்த்து 'கொடிநிலை கந்தழி' என்ற தொடக்கத்தினையுடைய தொல்காப்பியச் சூத்திரத்தைப் பின்பற்றி அமைந்ததாகும். இராகவையங்கார் கருதுவார் அன்றியும் திருக்குறட் கடவுள் வாழ்த்து நாற்பது குறள் வெண்பாக்களைக் கொண்ட பாயிரத்தின் ஒருபகுதியாகவும் காணப்படுகின்றது கடவுள் வாழ்த்து வான் சிறப்பு, நீத்தார் பெருமை அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களிலும், முதலாய கடவுள் வாழ்த்து ஏனைய பாயிரப் பாக்களிலும் வேறாய், தெய்வ மணமே கமழத்தோற்றுகின்றது.

சங்க காலத்தில் கடவுள் வாழ்த்தைவிட முனிவர், பார்ப்பனர், அரசர், பசு, நாடு, மழை என்னும் அறுவகை வாழ்த்துப் புரிந்த வாழ்த்து முதலியனவும் செய்யுள் வழக்கில் இருந்திருக்கின்றன என்பது தொல்காப்பியத்தால் அறியலாம். பல்லவர் காலத்து.

'வாழ்க அந்தணர் வானவர்
ஆனினம் வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக'

என்ற திருப்பாடலடிகளில் அறுவகை வாழ்த்தும் தெளிபடக்கிடக்கின்றன.

திருக்குறளில் தெய்வம், மழை, நீத்தார், அறம் என்பனவே வாழ்த்தப்படுகின்றன. ஆயினும் கடவுள் வாழ்த்தும் தனிப்பட்டோர் முறையிலேயே அமைந்துள்ளது எனலாம். பிற்காலங்களில் முன்னிலையாகவும், படர்க்கையாகவும் தெய்வப்பாராவு நிகழும் பொழுது அடியார் மனவியலுக்கமைய இறை 'வாழ்க' என்னுந் தொனி தோன்ற வாழ்த்துப் பாடுகின்றது. ஆனால் திருக்குறட் கடவுள் வாழ்த்தில் எங்கேனும் ஓரிடத்திலும் இறைவனை வாழ்த்தவில்லை. விபங்கோட் கிளவி பத்துக் குறள் வெண்பாக்களிலும் காணப்படவில்லை.

முதலாவது குறளில்எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்று கூறுகிறார் வள்ளுவர். இறைமையினை இவ்வுலகம் இல்லை என்ற பெருமுடிபின் பின் தொடரும் ஒன்பது குறள்களிலும் வேறு புதிதொன்று கூறப்படுவதற்கில்லை, எனினும் முதற் குறளுக்கு விளக்கமாக அல்லது தனிக்கூற்றாக அடுத்து இயைபு கூறுகின்றார்.

திருக்குறட் கடவுள் வாழ்த்திற் கூறப்படுகின்ற தெய்வத்தின் பெயர்களும், அடைகளும் மிகவும் புதியனவாகவும் ஒரு விதத்திற் புரட்சிமிக்கனவாகவும் தோற்றுகின்றன 'ஆதிபகவன்', 'வாலறிவன்', 'மலர்மிசை யேகினான்', 'வேண்டுதல் வேண்டாமையிலான்' 'இறைவன்', 'பொறிவாயில் ஐந்தவித்தான்' 'தனக்குவமையில்லாதான்', 'அறவாழி அந்தணன்' 'எண்குணத்தான்' எனவரும் தொடர்கள் குறிக்கற்பாலன.

கடவுள் வாழ்த்திற் குறட் பட்டனவற்றுள், 'மலர்மிசை' 'மாணடி', "அடி" "தாள்" என ஏழு வெண்பாக்களில் இறைவன் அடியையே ஏத்துகின்றார்.

கடவுளுக்குக்கொடுக்கப்பட்ட அடைமொழிகள் பொதுவானவையாக இருப்பது மற்றொரு சிறப்பாகும். திருக்குறளுக்கு முன்னரே நால்வகை வருணப் பாகுபாடும், (ஆசிரியவருகையும்) சாதி சமயப் பூசல்களும் தமிழ் நாட்டிற் பரந்து தலைதூக்கியிருந்தன, சங்கமருவிய காலம் வரலாற்றைப் பொறுத்தவரையில் இருண்ட காலமாகவிருந்தது. இவ்விடைக்காலத்தில் பொதுநூல் எழுந்தமை, திருவள்ளுவரின் பொதுமைக்கு மணிமுடி தரிக்கின்றது. சமணரது அருகதெய்வம், வைணவரது திருமால், சைவர்களது சிவனைப் போன்ற 'பன்மத'க் கடவுளரையும் திருக்குறட் கடவுள் வாழ்த்து மனங்கொள வைப்பது சிந்திக்கவுக்குரியது, போற்றற்குரியதுமாகும்,

கடவுள் வாழ்த்தைப்பொருட்படையாகப் பார்க்குமிடத்து, இன்னதற்கு இன்னபலன் என்று கணிதஞ்செய்தாற்போன்ற உணர்வு தோற்றுகின்றது.

வெண்டுதல் வேண்டாமை
இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல—

என்றுவிடத்து இத்தகை காணலாம்

தெய்வபக்தின் ஆரம்பமே மனித சமரசக்காய், மனிதன் தன்னை நிறைவிலியாக, பலமற்றவனாக,ஏழையாக,கோழையாகக் காணிக்கும் பொழுது தெய்வசிந்தனை எழுதல் இயல்பு. அளவிறந்த கல்விச் செருக்கும் பணப்பெருக்கம் மனிதனைத் தன்னம்பிக்கையில் வேரூன்ற வைப்பதால் தெய்வசிந்தனை பிறக்கும். இவற்றைக் "கற்றதனாலாய பயன்" என்பதாலும், "இருள்சேர் இருவினை" என்பதாலும் விளக்கியுள்ளார்.

'தனக்குவமை யில்லாதான்
தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது'

என்ற குறட்பா, ஆத்மீக உண்மை பொதிந்ததுமட்டுமன்றி, மனக்கவலைக்கு மருந்து இறைபக்தி ஒன்றேயொன்றும் தெளிவுறுத்துகின்றது.

துன்பம் முடிவுற்றது, மனிதனுடைய ஆசையின் அளவற்றுப் போக, "தெய்வத்தானாகாதெனினும்முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" குறைந்துபோக, நிறைவுறைய— மனிதனின் மனக்கவலைகள் பெருகின்றன என்னும் மனோதத்துவ அடிப்படையில் விளக்குவதாகும் இக்குறள்வெண்பா.

சிலப்பதிகார ஆசிரியர்,

திங்களைப் போற்றுதும்
திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னிக்
குளிர் வெண்
குடைபோதில்
வங்கண் உலகளித்தலான்"

என்று கூறியிட்டது, வாழ்த்தில் வேண்டற் பொருளுக் தோற்றுகின்றது. மதியை வணங்குவதற்கு அதன் நெறியையுஞ் சுட்டிக் காட்டுகிறார் இளங்கோவடிகள், ஆனால் திருவள்ளுவர்

"பிறவிப் பெருங்கடல்
நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்று உண்மைவாதத்தையே விளக்குகிறார் இறைவனைச் சேர்ந்தவர்களுக்கு 'புல்லாகிப்பூடாகித் தொடரும் எல்லாப் பிறப்புகளுமான பெருங்கடலை நீந்துவதற்குச் சிரமம் இருக்காது; இறைவனைத் தேடாதவர் காடாதவர் சேராதவர் அனைவருமே பிறவிப் பெருங்கடலில் அமிழ்பவரும், அலைப்புண்டு செல்பவருமாவர் மக்களுடைய நல்வாழ்வை மனத்திற்கொண்டு இறைவனுடைய புகழை நேரடியாக முகவுரையாகக் கூறும், மக்கள் நல்வாழ்வை வளம்படுத்த இத்தகையன வேண்டும் என 'விதி' கூறுகின்றார், இம்முறை தமிழில்—வேறு நூல்களிற் காண்டலரிது என்னும் எடுத்துக்கொண்டதற் புகழ்ச்சியாகப் புகல்கின்ற பான்மையன்று- இஃது.

## வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்

தென்னு தமிழ்மலை
சின்னஞ்சிறிய இரண்
டடிகள்
அன்னுதொறுஞ்சுவை
உள்ளுந்தொறும் உணர்
வாகும் வண்ணம்
சொல்லும் அறம்,பொருள்
இன்பம் அனைத்தும்
கொடுத்த திருவள்ளு
வனைப் பெற்றதாற்
பெற்றதே புகழ்வையகமே!
— பாரதிதாசன்


கணபதி ஸ்ரோர்ஸ் யானை மார்க்

நல்லெண்ணெய்

சுத்தமான இலங்கை எள்ளில்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

தொகையாகவும் சில்லறையாகவும்பெற்றுக்கொள்ளலாம்

கணபதி ஸ்ரோர்ஸ்
சொந்தக்காரர்:
கா. சு. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 225
கே. எஸ். கே. சீலைக் கவனித்து வாங்குங்கள்.

T' grams: AUSTINS T' phone: 7022

CHELLAPPA & CO.
AGENTS
Messrs Walker Sons & Co. Ltd.
4/1 STANLEY ROAD, JAFFNA.

எமது வியாபார ஸ்தாபனம், ஆனி முதல் திகதியிலிருந்து 4/1, ஸ்ரான்லி வீதிக்கு மாற்றப்பட்டு விட்டது என்பதை இத்தால் எல்லோருக்கும் அறிவித்துக் கொள்கிறோம்.

செல்லப்பா & கோ
உரிமையாளர்.

பலரக அரிசி, நெல்லு, எள்ளு, பலசரக்கு சாமான்கள், மற்றும் விலங்குத்தின் (தவிடு, புண்ணாக்கு) வகைகளில், உங்கள் தேவைகளை எங்களிடம் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்

S.V. கருப்பையா அன் சன்ஸ்
28, மானிப்பாய் ரோட்.
யாழ்ப்பாணம். போன்-7154


தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

சிறந்த புகைப் படங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்
லீலா ஸ்ரூடியோ
80, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Telephone: 7199
தரம் மிக்க தங்க, வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
பொ. அம்பலவாணர்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலறி ஸ்ரோஸ்
114, செட்டியார் தெரு, கொழும்பு.
T. Phone: 5662


"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்"

# "மாணவர்களுக்கு பெற்றோர் முன்மாதிரியாகவிளங்கவேண்டும்"

சாவகச்சேரி, வெள்ளி

"மாணவர்களை நல்ல பழக்கமுள்ளவர்களாக்குவது சூழ்நிலைதான். சூழ்நிலை நல்லவர்களை கெட்டவர்களாகவும், கெட்டவர்களை நல்லவர்களாகவும் மாற்றுகின்றது. தற்பொழுது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல சூழ்நிலையில் வளர்க்கத் தவறுகின்றனர். இதனால்பிள்ளைகள் தீயவழியில் செல்லத் தலைப்படுகின்றனர். நல்ல ஒழுக்கமுள்ள குணசீலர்களாக இவர்கள் வாழ ஏற்ற வழிவகைகளை பெற்றோர் போதிப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது தங்கள் அன்றாட வாழ்க்கையிலும் கடைப்பிடித்து முன்மாதிரியாகத் திகழவேண்டும்" என்று தென்மராட்சிக் காரியாதிகாரி திரு ஆர். சிதம்பரப்பிள்ளை வரணி மட்சு அரசினர் பாடசாலை வித்தியாலய பெற்றோர் தின விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், வடபகுதியில் நிலவுகின்ற இரத்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இளைஞர்களும், பெரியவர்களும் இரத்ததானஞ்செய்யமுன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவ்விழாவிற்கு சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில் "இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர்தான் கிராமத்திலே மறுமலர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கின்றது" என்றுகூறினார். வட்டார வித்தியாதரிசி திரு. கே. கணேசபாபதிபேசுகையில் ஊக்கமுள்ள பெற்றோர்களால்தான் ஒருபாட்சாலை வளர்கிறது என்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கல்வியைமாத்திரமன்றி கலைகளையும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும் கூறினார்.

வரணிமகாவித்தியாலய அதிபர் திரு தங்கராசா பேசுகையில்,சமய அறிவின் அடிப்படையிலேயே கல்வ அமையவேண்டும் என்றார்.

வேறுபலரும் சொற்பொழிவாற்றினர் முடிவில் மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

## மத்திய கல்லூரி விளையாட்டுபோட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக முதலியார் சி. முத்துத்தம்பி, செல்வி ஆர். முத்துத்தம்பி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

---

## பாரதி படிப்பக நிர்வாகிகள்

சாவகச்சேரி, வெள்ளி

கற்குளி வடக்கு பாரதிபடிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா அண்மையில நடைபெற்றபொழுது புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்- சி. இரத்தினம், தலைவர்- த. மவனகேசரி, உபதலைவர்- மு. வீரசிங்கம், காரியதரிசி- க. ஜெயராமச்சந்திரன், உபகாரியதரிசி- அ. சச்சிதானந்தசிவம், தனாதிகாரி- பி சின்னத்துரை, உபதனாதிகாரி- சி. இராமநாதன்.

## 'நிலை மாறவேண்டும்'

சுழிபுரம், வெள்ளி

"எமது சைவ ஆலயங்களில் நடைபெறும் ஆரம்ப நிகழ்ச்சிகளான நடனம், கரகம், நாடகம் போன்றவற்றுக்கு திரளும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தானும் சமயப்பிரசங்கங்கள் நடைபெறும் தினங்களில் கூடுகிறார்கள் இல்லை. இந்நிலை மாறவேண்டும். அப்படி மாறினால் தான் எமக்கு விமோசனம் கிடைக்கும் என வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இசையாசிரியர் திரு. க. பொன்னம்பலம் சித்தங்கேணி பிள்ளையார் கோவில் எட்டாம் திருவிழா வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது இனச் செல்வங்கள் இறைவன் புகழ் பாடவும் இறைவனை நினைக்கவும், வணங்கவும் நாம் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். சமய வாதங்களும் தர்க்கரீதியான விளக்கங்களும மலிந்த இக்காலத்தில் மெய்ப்பொருளின் உண்மையை நாம் நன்கு விளக்கி வைக்கவேண்டியது முக்கிய கடமையாகும், நாயன்மார்களின் திருமுறைகள், நன்கு விளங்கி படிக்கவேண்டும், நாம சந்தேகம் கொள்வதை நீக்கி உண்மை இன்பத்தை நாடவேண்டும்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 12-6-65

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்தித்திரட்டு, 7-00 இசைக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 விமர்சனம், 10-00 நேயர்விருப்பம்.

#### ஞாயிறு 13-6-65

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தமிழ்மொழி இசை பாடல், 8-00 டெனத்தநிகழ்ச்சி 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 படப்பாட்டுக்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மதராப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 நாதஸ்வரத்தியக்கச்சேரி, 6-45 வீணை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மங்கையர்க்கு — மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் பட்டலை, 10-15 தேர்ந்த இசை.

---

## மேலதிகமாக 5 புள்ளிகள்

பம்பலப்பிட்டி வெள்ளி

இறுதியாக நடைபெற்ற ஜி சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் பாடத்திற்கு தோற்றிய ஒவ்வொரு மாணவரும் பெற்ற புள்ளிகள் சேர்க்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ இரியகொல்ல இதற்கான அறிவித்தலைச் செய்துள்ளார். விலங்கியல் பாட வினாத்தாள்கள் மிகவும் கடினமாக இருந்ததாகவும் குறிப்பிட்டதாத்துக்கு மிகவும் உயர்ந்ததாகவும் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே மந்திரி மேற்கண்ட நடவடிக்கை எடுத்துள்ளார்.

# பசறை நகரில் தமிழ்ப் பாடசாலை

## பலவருட முயற்சி பலிதமாகியது

கொஸ்லாந்தை, வெள்ளி

பசறை நகரிலே தமிழ்பிள்ளைகளுக்கென ஒருதமிழ்ப் பள்ளிக்கூடம் வேண்டுமென பல வருடங்களாக இங்குள்ள தமிழ் மக்கள் போராடி வந்ததன் பயனாக, தற்போது அரசாங்கம் அதற்கான இடத்தை 14-ம் கட்டையில் தேர்ந்தெடுத்து கொடுத்துள்ளது. இதற்கான செலவை பாதி அரசாங்கமும் மிகுதியை பெற்றோர்களிடமிருந்தே பெற வேண்டுமெனவும் அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. தற்போது சிங்கள - தமிழ்ப் பகுதியும் இருநேரப் பாடசாலையாக ஒரே கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இரு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒழுங்காகப் படிக்க முடியவில்லையென்றும், கேம போதாதென்றும் இரு சமூகத்தவரும் பண்டாரவளை உதவி கல்வி அதிகாரி திரு. சேனநாயக்காவிடம் புகார் செய்திருந்தனர். இதைத் தொடர்ந்தே தமிழ்ப்பள்ளிக்கூடத்தை தமிழ்ப் பிள்ளைகள் கூடுதலாக உள்ள இடமான 14-ம் கட்டையில் கட்டுவதற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் பெரு முயற்சியினாலேயே இவ்வித உத்தரவு பெற முடிந்ததாகத் தெரிகிறது.

பசறை எம். பி. திரு. ஏ. பி. பீரிஸ், நியமன எம். பி. திரு. எஸ்.தொண்டமான், திரு. வி. அண்ணாமலை ஆகியோர் இப்பாடசாலைக் கட்டிடம் கட்டுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

# "ஜனத்தொகையை கட்டுப்படுத்துவது அவசியம்"

பருத்தித்துறை, வெள்ளி

"பின் தங்கிய நாடுகளின் தேசியப் பிரச்னைகளான பொருளாதார நெருக்கடி, வேலையின்மை முதலான பிரச்னைகளை விருவிக்க பெருகி வரும் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியது விரும்பியோ விரும்பாமலோ அவசியமாகிறது. இதைவிட சாதாரண குடும்ப அமைப்பின் கூட் வருவாய்க்கும் வசதிக்கும் ஏற்ப திட்டமிட்டு அதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியுமிருக்கிறது. இதன் அடிப்படையில்தான் உலகில் பலநாடுகளில் குடும்ப நலத் திட்ட ஆக்க வேலைகளும் பிரச்சாரமும் இன்று மேற்கொள்ளப்படுகின்றன"

இவ்வாறு களிடன்-நிலங்கை குடும்பநலத் திட்ட தலைவர் டாக்டர் கின் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற குடும்பநலத்திட்டக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

குடும்பநலத்திட்டச் சபையின் வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை முன்விட்டு நடைபெற்ற அக்கருத்தரங்குகளைத் தலைவரும் ஹாட்லிக் கல்லூரி அதிபருமான திரு. க. பூர

(8-ம் பக்கம் பார்க்க)


**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
Jane Fonda
in
Sunday in New York
(Metro color)
[ADULTS ONLY]



குதூகல
வாழ்வுக்கு
மார்க்கம்
நல்ல
ஆரோக்கியமே!
இதை
அளிக்கிறது



நேத்திராலோகதைலம்


இது பீனிசம்,தடிமன்,நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.
வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.



வெற்றிகரமான 5வது வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா வெம்பிலி ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி) (நீர்கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

# இரத்ததானமும் அன்பளிப்பும்

## கல்லூரி ஆசிரிய மாணவரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற செவ்வாய்க்கிழமை கட்டாடும் இரத்தவங்கி பகுதியினர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு சென்ற போது ஆசிரியர்களும் மாணவர்களும் உட்பட 60 பேர் இரத்ததானம் செய்ய முன் வந்தனர். பரிசோதனையின் பின்னர் 40 பேரிடமிருந்து இரத்தம் சேகரிக்கப்பட்டது.

இரத்ததானம் செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 400 ரூபாவையும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இரத்த தான சங்கத்துக்கு அதன் பிரசார வேலைகளுக்கென அன்பளிப்புச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தகவல், ஒலிபரப்பு துறைபற்றி ஆராய கமிஷன்

## ராஜாங்க மந்திரி நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வியா

இலங்கையின், ஒலிபரப்பு, தகவல் துறை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வென ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன கமிஷனொன்றை நியமித்துள்ளார்.

இலங்கை வானொலி ஒலிபரப்புத்தரத்தை உயர்த்துவது மற்றியும் நிர்வாகத்தை சீர்படுத்துவது பற்றியும் கமிஷன் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும், வானொலியில் அரசியல் விஷயங்கள் சேர்ப்பது பற்றிய நன்மை தீமை பற்றியும் கமிஷன் கருத்து தெரிவிக்கும் படி கோரப்பட்டுள்ளது. இலங்கையில் டெலிவிஷனை புகுத்துவது பற்றிய சாத்தியக் கூறுகள் பற்றியும் கமிஷன் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்,

அரசாங்க தகவல் பகுதியினரால் தயாரிக்கப்படும் திரைப்படங்களின் தரத்தை உயர்த்துவது பற்றியும் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கமிஷன் கோரப்பட்டுள்ளது,

தகவல் ஒலிபரப்புப் பகுதி பொது மக்களுக்கு தரமான சேவைசெய்ய வழி அமைக்கு முகமாகவே ராஜாங்க மந்திரி இக்கமிஷனை நியமித்துள்ளதாக அறியப்படுகிறது.

# கைதொழில், கமத்தொழில்களில் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்

## வடமாகாணத்தில் அரசாங்க அதிபர் புத்திமதி

காங்கேசன்துறை, வியாழன்

நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க படித்த இளைஞர்கள் கைத்தொழில், கமத்தொழில்களில் ஈடுபட்டு உழைக்கவேண்டும், மிகத்திறமையான மாணவர்கள் சிலர் உயர்தர உத்தியோகங்களுக்காகப் படிக்கலாம். மற்றவர்கள் கைத்தொழில் ஸ்தாபனங்களை நிறுவி வேலைவாய்ப்புக்களை உண்டாக்கவேண்டும்"

வேலணை அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் சென்ற கிழமை நடைபெற்ற இளைஞர்கள் தொழில்வாய்ப்புகள் பற்றிய கருத்தரங்கத்தில் உரை நிகழ்த்திய வடமாகாண பதில் அதிபர் திரு. ஏ. பெருமையினார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

யாழ்ப்பாணம் இளைஞர்சமூக பொருளாதார முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு வட பகுதி முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. சோமசேகரம் தலைமைவகித்தார்.

தீவுப்பகுதி எம்.பி. திரு.வி. நவரத்தினம் பேசியதாவது:—

தீவுப்பகுதி இளைஞர்கள்பலர் மூலதனம் இல்லாமையால் கைத்தொழில்களில் ஈடுபட முடியாதவர்களாய் இருந்து வருகிறார்கள். வாழ்க்கைச் செலவு அதிகரித்துவரும் இக்காலில் இளைஞர்கள் வீணாக காலத்தைப் போக்கக்கூடாது. முதலீடு செய்து கொடுப்பதற்கேற்ற ஸ்தாபனங்கள் எம்நாட்டிலும் இயங்கவேண்டும். கைத்தொழில் கமத்தொழில்களில் ஈடுபடுவோர் கடன்பெறவசதிகள் இருக்கவேண்டும். குடியேற்றத் திட்டப்பகுதிகளில் குடியேறி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலும் இங்குள்ள இளைஞர்கள் கவனஞ் செலுத்தவேண்டும்.

கைத்தொழில்களால்பலநாடுகள் முன்னேற்றம் அடைந்துள்ளன. எனவே நம்நாடும்கைத்தொழில்களில் முன்னேற்றமடைய இளைஞர்கள் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும்தீவுப்பகுதியிலும் இளைஞர் சமூகபொருளாதாரமுன்னேற்றக் கழகத்தின் கிளை ஒன்றைநிறுவவேண்டுமென வேலணைக் கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. சதாசிவம்வேண்டுகோள்விடுத்தார்,

வடபகுதி குடிசைக் கைத்தொழில் இளைகாலைவச்சேர்ந்த திரு. குமரையாவும் உரைநிகழ்த்தினார்.

# அர்ச்அந்தோனியார் திருநாள்

சன்னாகம், வியாழன்

சன்னாகம் அர்ச். அந்தோனியார் திருநாள் வழமை போல் இம்மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலை. 6-30 மணிக்கு வண. குருவர் பெர்னாண்டோ சன்டைன் திவ்விய பலிப் பூசையை நிறைவேற்றுவார். சுற்றுப்பிரகாரத்துடன் ஆராதனை நிறைவுறும்.

# சீனமீது தாய்லந்து புகார்

லண்டன், ஜூன் 10

தாய்லாந்தின் உள் விவகாரங்களில் சீனா குழுக்கிடுவதாக தாய்லாந்து அரசாங்கம் புகார் தெரிவித்துள்ளது.

இவ்விதம் சீனா குழுக்கீடு செய்கிறது என்பதற்கான தஸ்தாவேஜுகள் சில அரசாங்கத்திடம் சிக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# உரியவர் யார்?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கே. கே.எஸ் வீதியில் ஒரு மூக்குக்கண்ணாடியும் இன்னும் சில காகிதங்களும் அடங்கிய ஒரு பைகண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு"காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் ஈழநாடு காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# சட்டக்கல்லூரி புதிய அதிபர்

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழக சட்டப் பேராசிரியர் திரு. சி. நடராசா சட்டக்கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டப் பரீட்சையில் முதல் தரத்தில் சித்திபெய்திய ஒரு சில இலங்கையரில் திரு. நடராசாவும் ஒருவராவர்.

சட்டக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளரான திரு. ஆர். கே. டபிள்யு குணசேகரா பல்கலைக்கழக புதிய பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசிய விளையாட்டு விழா

சுழிபுரம், வியாழன்

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் தேசிய விளையாட்டுவிழா இம்முறை யாழ்ப்பாணத்திலும் சீகிமலிலும் நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. யாழ்ப்பாண முற்றவெளியில் மாட்டு வண்டில் போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி மரதன் ஓட்டப் போட்டிகளும் திறந்தவெளியரங்கில் நாடகட் டனப் போட்டிகளும் நடைபெறும். சீகிமலையக் நீச்சல் போட்டி, கண்டிய நடனம், கிராமிய நடனம் ஆகியபோட்டிகள் நடைபெறும். இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் இத்தேசிய விழா வைபவத்துக்கு அயல்நாட்டுத் தூதுவர் ஒருவரும் மந்திரி ஒருவரும் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்கள் என நம்பப் படுகிறது;

பழைய காம்பியங்களில் வரும் சிறந்த கட்டங்களை அப்படியே சித்தரித்துக் காட்டும் ஒரு காப்பியப் பவனியும் யாழ்ப்பாண நகரபாலைதகளில் நடத்தப்படும்,

# கிளிக்கு தண்டனை

நியோடிஜெனிரோ, ஜூன் 10

80 வயதுள்ள வயோதிப மாதைதிட்டியகுற்றத்துக்காகத் இந்த வயோதிய மாதன்பக்க துவீட்டில் வளர்க்கப்பட்டு வந்த கிளிக்குத் தண்டனைவழங்கப்பட்டது.

தம்மை பக்கத்துவீட்டிலிருக்கும் ஒருவர் எந்நேரமும் திட்டிக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டமாது செய்துகொண்ட புகாரின்பேரில் பொலிசார் பக்கத்துவீட்டுக்கு விசாரணைக்கு வந்தபோது மேற்படிகிளி விசாரணைக்கு வந்தவர்களை மிகவும் மோசமான முறையில் திட்டியதாம்.

பொலிசார் கிளியைக் கைது செய்து, நல்ல வார்த்தைகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். பொலிஸ் அதிகாரியின் 8 வயதுப் புதல்வன் தற்போது நல்ல பாடங்களைச் சொல்லிவருகிறான்.

# ரூ.40,000 நஷ்டம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு கோட்டையில் உள்ள கைத்தொழில் ஸ்தாபனமான ஒக்லா மாதம் 40,000 ரூபா நஷ்டத்தில் நடைபெறுறுவருகிறது.

கைத்தொழில் இலாகாவிலும், கிராமமுன்னேற்றஇலாகாவிலும் இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுக்கப்படும் ஓடர்கள் தாமதித்துக்கொடுப்பதினாலேயே இந்நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.



யாழ்ப்பாணம் புதிய விளையாட்டரங்கில் முதல்முதலாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட இலங்கைக் கோஷ்டி வீரர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. வான்சான்டன் மந்திரிக்கு அறிமுகம்செய்து வைக்கிறார்.



உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட மேற்கு ஜேர்மன் உதைபந்தாட்டக் கோஷ்டியினர்.

— படம்: சித்திராலயா.

# "ஊக்கமுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குறளின் கடைசி அடியினையே எமது தமிழ் மறைக் கழகத்தின் குறிக்கோளாகக்கொண்டுள்ளோம்,

ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறள்களின் கருத்துக்கள் யாவும் 'உள்ளத்து அனையது உயர்வு' எனும் இந்த மூன்று சொற்களுள் அடங்கியுள. வாழ்வில் வெற்றி தரும் மந்திரம் இது. வள்ளுவர் உலக மக்களுக்கு வழங்கிய அரும்பெரும் அறிவுரையும் இதுவே.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் சிந்தனை உலகிலே உண்டாக்கிய பெருந்திருப்பம் எனவும் 'மக்கள் யாவரும் உயர்வடைய உரைத்த ஒப்பற்ற பொது நெறி எனவும் இதனைக்கூறலாம்,

தங்கள் உள்ளத்திலே உள்ள ஆற்றலை உணராது சோர்ந்து கிடக்கும் மக்களுக்கு அவர்களுடைய உள்ளத்து ஆற்றலை உணர்த்தி அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும் வாழ்வில் ஆர்வத்தையும் உண்டாக்குவதில் வள்ளுவரைப்போல எவரும் வெற்றிபெறவில்லை. இதனாலேயே இன்று முழு உலகமும் அவரைப்போற்றுகிறது.

"நினைப்பவற்றை யெல்லாம் உயர்வாக நினையுங்கள்" என்று மக்கட் குலத்தை ஊக்கிய பெருந்தகையாளர் அவர். உயர்வாக நினைப்பன யாவும் கிடைக்காவிடினும் அந்நினைவைவிட வேண்டாம் எனவும் அவர் ஊக்குகிறார்,

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்பது அவர் திருவாக்கு.

ஊக்கமுள்ள உள்ளத்தவருக்கு எல்லாச் செல்வமும் உண்டாகும் என்றும் அவர் உறுதி உரைக்கின்றார். ஊக்கம் உடையவரிடத்து ஆக்கம் வழி கேட்டுச் செல்லும் என நயம்படவிளக்குகின்றார்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை" என்பது அவர் வாய்ச்சொல்.

# காணி விற்பனவு

நீர்வேலி தெற்கு வெங்காயச் சங்கத்திற்குப் பக்கமாகவும், நீர்வேலி தெற்கு வயிரவ கோவிலுக்கு அண்மையில்லுக்குப் பக்கத்திலுள்ள 8 அறை கல்கொண்ட 2 பரப்புக் காணியும் அதன் அருகிலுள்ள 5 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. வீட்டைச் சேர்ந்த இரண்டு பரப்பைத் தனித்தும், 5 பரப்பை இரண்டாகப் பிரித்து தனித்தனியேயும், அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் காணவும். விற்பனையாளர்: கெ. கெ. அம்புலேஸ்மேர் மார்த்து நம். 16 மடம்வீதி, யாழ்ப்பாணம். [illegible]

# "ஜனத்தொகை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கருத்தரங்கில் கேட்கப்பட்ட பல வினாக்களுக்கு விடையளிக்கு முகமாக அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

குடும்பக்கட்டுப்பாட்டுமுறைகள் எந்தவிதமான தீமையையோ உடற்கேட்டையோ கொடுத்துவிடக் கூடியவை அல்ல. அதற்கு மதிலாக சுகமும் பலமும் உள்ள தாயையும் குழந்தைகளையும் தோற்றுவிக்க உதவும்,

தேவைக்கேற்ற அளவான குழந்தைகளே குடும்பத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் தரவல்லவை, அத்துடன் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வுக்கும் அது பெரிதும் உதவியும் உத்தரவாதமும் அளிக்க வல்லது.

வட்டுக்கோட்டைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வி. ஜீவரூபகம், சுகாதார கல்வி விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலம் ஆகியோர் உட்பட டாக்டர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்,

இந்த மூன்று குறள்களையும் இந்தத் திருக்குறள் நாளாகிடின் செய்தியாக நாம் கொள்வோம், ஊக்கமுடையவர்களாய் உயர்ந்தவற்றை எண்ணி ஆக்கம்பெற்று வாழ்வோம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 19-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.